IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:112/2017

**DEP OF WITNESS: PW1** NAME: Munirathinam

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் விவசாயம் செய்துவருகிறேன். நான் காக்காதோப்பில் எனக்குரிய 2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனது பூர்வீகம் காட்பாடி தாலுக்காவில் உள்ள ஆலங்கநேரி ஆகும். திருமணத்திற்கு பிறகு நான் காக்காதோப்பிற்கு வந்துவிட்டேன். காக்காதோப்பு எனது அம்மா பிறந்த ஊரும் எனது பாட்டியின் ஊரும் மற்றும் எனது மனைவியின் ஊரும் ஆகும். விஷேம் ஏதேனும் நடைபெற்றால் மட்டும் நான் எனது பூர்வீக ஊரான ஆலங்கநேரிக்கு சென்றுவருவது வழக்கம். எனக்கு திருமணமாகி சுமார் 30 வருடத்திற்கு மேலாகிறது. எனக்கு 4 பெண் பிள்ளைகள். 3 பெண் பிள்ளைக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது இன்னும் 1 பெண் பிள்ளைக்கு மட்டும் திருமணம் நடைபெறவில்லை. எனது நிலத்தில் சுந்தரம் மற்றும் மற்ற பிரதிவாதிகள் என்னை வரக்கூடாது என்று அடித்து பிரச்சனை செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2017-ல் என்னிடம் பிரச்சனை செய்தார்கள் எந்த தேதி என்று ஞாபகத்தில் இல்லை. என்னையும் எனது மனைவியையும் பிரதிவாதிகள் அடித்து தகராறு செய்தார்கள் அதனால் அவர்கள் ஏர்ஓட்டவதை தடுத்துநிறுத்தினோம். எந்த சொத்தில் என்ன சர்வே நம்பரில் எத்தனை ஏக்கரில் ஏர் ஓட்டினார்கள் என்று எனக்கு படிப்பறிவு இல்லாததால் சொல்ல தெரியவில்லை. நான் வாங்கிய சொத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சொத்தின் விவரம் எனக்கு சரியாக தெரியவில்லை. எனக்குரிய சொத்தினை நான் வாங்கி 11 வருடங்களாகிறது. சீனன் என்பவரிடமிருந்து நான் வாங்கினேன். சீனன் எனது மாமனார் அவரிடமிருந்து தான் நான் 24.11.2008-ல் 2 - 2 1/2 ஏக்கர் சொத்து வாங்கினேன். எனது மாமனாரின் தகப்பனார் பெயர் துரைசாமி ஆகும். துரைசாமிக்கு 5 ஆண் பிள்ளைகள் 1 பெண் பிள்ளை என்றால் சரிதான். சீனன் மூத்த அண்ணன் பெயர் காசி. அவரது 2-வது அண்ணன் பெயர் சின்னதுரை. 3-வது அண்ணன் சுப்பிரமணி, 4-வது அண்ணன் கோவிந்தசாமி 5-வது எனது அம்மா காந்தம்மாள் கடைசியாக தான் எனது மாமனார் சீனன். தாய்மாம் காசிக்கு ஒரே ஒரு பையன் அவர் பெயர் சுந்தரம் அவர் இந்த வழக்கில் 2-வது பிரதிவாதி. எனது அம்மாவுடன் பிறந்த சகோதரர் தான் முதல் பிரதிவாதி. 3-வது பிரதிவாதி எனது அம்மா. எனது அம்மாவிற்கு 80 வயதிற்கு மேல் இருக்கும். கோவிந்தசாமிக்கும் 80 வயதிற்குமேலிருக்கும். சுந்தரத்திற்கு 50 வயதிற்குமேலிருக்கும். சின்னதுரை மனைவின் பெயர் இந்திராணி, அவரது மகள்கள் 4 பேர்கள். 3 பெண்கள் காக்காதோப்பில் உள்ளார்கள். ஒரு பெண் சித்தூரில் உள்ளார்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. A.CHELLAPANDIAN,
DISTRICT MUNSIF.